செ.வெ.எண் : 663/2016 நாள்: 22.09.2016

# பத்திரிகை செய்தி

ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படும் கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் இளைஞர் நீதிச்சட்டம் 2015 ன் கீழ் சிறைச்சாலைகளில் 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் தங்கியுள்ளனரா என்பதை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருந்தது.

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி. S. குமுதா அவர்கள் தலைமையில் இலவச சட்ட உதவி ஆணையத்தின் "பி" பிரிவு வழக்கறிஞர் திரு. C. தேவசுந்தரம் அவர்கள் மற்றும் சமூக ஆர்வலர் திரு. அருள் கண்ணன் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட இக்குழுவினால் 17.09.2016 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள மாவட்ட சிறை, தக்கலை மற்றும் குழித்துறையிலுள்ள கிளைச்சிறை ஆகிய 3 சிறைச்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் இச்சிறைச்சாலைகளில் 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் எவரும் தங்க வைக்கப்படவில்லை என தெரியவந்தது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**